எண் கணித பலன்கள்: கே.சி.எஸ். ஐயர்



# எண்ணும், எழுத்தும்!

(05.03. 2010 முதல் 11.03. 2010 வரை)



## 01, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

வெற்றிகளை மட்டுமே கருத்தில் கொண்டு திட்டங்களை வகுக்கும் தன்மையைக் கொண்ட எண்ணில் பிறந்துள்ள உங்களின் முக்கியமான எண்ணங்கள் இந்த வாரம் ஈடேறும். இதற்கு நண்பர்களும் உறுதுணையாக நிற்பார்கள். தொழில் சிறப்பாக நடக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களிலிருந்து ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் நிறையும். சுபகாரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். வீடு மாற்றம் செய்ய வாய்ப்புகள் கூடிவரும். சகோதர, சகோதரிகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேநேரம் உஷ்ண சம்பந்தமான உபாதைகளால் நீங்கள் பாதிக்கப்பட நேரிடலாம்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 06, 07, அதிர்ஷ்ட எண்கள்: 1, 3.**



## 02, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

நேர்மறையான எண்ணங்களை அதிகமாகக் கொண்டிருந்தாலும் மெத்தனமான போக்கைக் கொண்டுள்ள தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள நீங்கள், உடன் பிறந்தவர்களின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழிலில் முன்னேற புதிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள். நெடுநாட்களாகத் தடைப்பட்டிருந்த எண்ணங்களும் உங்கள் முயற்சியினால் நிறைவேறும். பெற்றோருக்கும் உங்களால் உதவிகள் கிடைக்கும். கடிதம் மூலம் இனிப்பான செய்திகளை நீங்கள் எதிர்பார்க்கலாம். அதேநேரம் அநாவசியப் பயணங்களைச் செய்ய வேண்டிவரும். மேலும் மறைமுக எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிடும்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 05, 08, அதிர்ஷ்ட எண்கள்: 1, 4.**



## 03, 12, 21, 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

நியாயமான வாழ்க்கைக்குத் தேவையானதைப் பெற்று மகிழ்ச்சியடையும் தன்மை கொண்ட எண்ணில் பிறந்துள்ள உங்களுக்கு, தொலை தூரப் பயணத்தால் நன்மை ஏற்படும். பொருளாதாரம் சற்று வளமாகும். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கூடும். பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். புதிய நண்பர்களுடன் சேர்ந்து, புது முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அதே சமயம், சகோதர, சகோதரிகளிடம் அனாவசியப் பேச்சுகள் வேண்டாம். பெற்றோர்களிடமும் பக்குவமாக நடந்துகொள்ளவும். ரியல் எஸ்டேட், நெருப்பு, உணவகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பயன்பெறுவார்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 06, 08, அதிர்ஷ்ட எண்கள்: 2, 5.**



## 04, 13, 22, 31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:

வாழ்க்கையில் உயர்வதற்கான வழிகளை எப்பொழுதுமே சிந்தித்துக் கொண்டிருக்கும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள நீங்கள், செய்தொழிலில் நிலைத்து நிற்பீர்கள். உயர் பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு உதவுவர். அரசாங்க வழியில் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். செலவுகள் சற்று கூடினாலும், வருமானம் தேவைக்கேற்ப வந்து கொண்டிருக்கும். மற்றபடி குடும்பத்திலும், வெளியிலும் உங்கள் செல்வாக்கு குறையாது. தேக ஆரோக்கியமும் சீராகவே இருக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தால் எதையும் சீர்தூக்கிப் பார்த்து, சரியான முடிவுகளை எடுப்பீர்கள். தொழிலில் புதிய நுணுக்கங்களைக் கற்பீர்கள். பக்தி மார்க்கத்தில் மனம் செல்லும். எளியவர்களுக்கு உங்களாலான உதவிகளையும் செய்வீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள்: 07, 10, அதிர்ஷ்ட எண்கள்: 4, 8.**